**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : MC 16/2025**

**Prosecution witness : ம.சா.1** **Date : 26.03.2026.**

| | |
|---|---|
| **Name : பவித்ரா** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**முதல் விசாரணை**

1) சவுரியூரில் எத்தனை ஆண்டுகாலமாக இருந்து வருகிறேன் என்றால் இரண்டாண்டு காலமாக அப்பா வீட்டில் இருந்து வருகிறேன். என் அப்பா எத்தனை தறி வைத்துள்ளார் என்றால் இரண்டு தறி ஓட்டுகிறார். அவ்வாறு தறி ஓட்டுவதில் எனக்கு எவ்வளவு வருமானம் வரும் என்றால் நான் தறி ஓட்டுவதில்லை. முதல் திருமணம் நடந்து எத்தனை ஆண்டுகாலமாக தறி ஓட்டினேன் என்றால் 10 ஆண்டு காலமாக தறி ஓட்டினேன். என்ன தறி ஓட்டுவோம் என்றால் சாதா புடவை தறி ஓட்டுவோம். எவ்வளவு கூலி கொடுப்பார்கள் என்றால் ரூ.400/– கொடுப்பார்கள். மாதம் முழுவதும் பாடுபட்டால் ரூ.15,000/–க்கு மேல் வருமானம் வரும் என்றால் ஆர்டரை பொறுத்து வரும்.

2) எவ்வளவு ரூபாய் மாதம் கிடைக்கும் என்றால் ரூ.6000/– கிடைக்கும் இது தவறு என்றும் மாதம் ரூ.15,000/– கிடைப்பதை மறைத்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நிச்சயிக்கப்பட்ட பின்னர் என் கணவரை பிடித்ததால் தான் திருமணம் செய்தேன் என்றால் ஆமாம். நிச்சயதார்த்தம் செய்த போது என் கணவரின் அண்ணன், அண்ணி ஆகியோர் வந்திருந்தார்கள் என்றால் ஆமாம்.

3) என் கணவரின் அண்ணன் அண்ணி எங்குள்ளார்கள் என்றால் என் வீட்டிலிருந்து 10 கிலோமீட்டர் தள்ளி நங்கவள்ளியில் உள்ளார்கள். மாமனார் வீட்டில் எவ்வளவு நாட்கள் இருவரும் ஒன்றாக குடித்தனம் செய்தோம் என்றால் 7 மாதம் செய்தோம். என் கணவருக்கு ஏற்கனவே 2022ம் வருடம் நங்கவள்ளி

சிவன் கோவிலில் சரண்யா என்ற பெண்ணுடன் முதல் திருமணம் நடந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. திருமணத்தின் போது என் கணவர் மற்றும் அவர் குடும்பத்தாரை விசாரிக்கவில்லை என்றால் ஆமாம். யார் அறிமுகம் செய்து திருமண ஏற்பாடு நடந்தது என்றால் மாமா சுந்தரம் ஏற்பாடு செய்தார்.

4) சரண்யா என்ற முதல் மனைவி திருமணம் நடந்த முதல் நாளிலேயே விடியற்காலை 4 மணிக்கு ஏற்கனவே சரண்யா விரும்பிய நபருடன் சென்றுவிட்டதால் வாய் மொழியாக பேசி கழித்துவிட்டாரகள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. முதல் திருமணம் பற்றி எனக்கு எப்போது தெரியும் என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பு தான் தெரியும்.

5) எனக்கும், சின்னசோரகையை சேர்ந்த சக்திவேல் என்பவருக்கும் திருமணம் நடந்து 60 நாட்கள் வாழ்ந்த பிறகு இறந்துவிட்டார் என்றால் ஆமாம். கொரோனா காரணமாக இறந்துவிட்டார். அவருக்கு ஜன்னி அடிக்கடி வரும் என்ற விவரம் தெரிந்து கொண்டு தான் திருமணம் செய்தோம் என்றால் எப்போதாவது வரும் என்று விவரம் தெரிந்து திருமணம் செய்தோம்.

6) நான் என் முதல் கணவரை அவருக்கு ஜன்னி அடிக்கடி வரும் என்ற விவரம் தெரிந்து பார்த்து கொள்ளாமல் விட்டு பிரிந்து வந்த பின்னர் அவர் இறந்துவிட்டார் என்றால் அவ்வாறு இல்லை. என்னுடைய அஜாக்கிரதையால் தான் இறந்துவிட்டார் என்றால் கொரோனாவால் இறந்துவிட்டார். என் மனு மற்றும் முதல் விசாரணையில் என் முதல் கணவர் எவ்வாறு இறந்தார் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் ஆமாம்.

7) எங்கள் இருவருக்கும் நடந்த திருமணம் இரண்டாவது திருமணம் என்றால் ஆமாம். என் முதல் கணவர் இறந்த இறப்பு சான்றிதழ் உள்ளதா என்றால் உள்ளது. அவர் எந்த தேதியில் இறந்தார் என்றால் நினைவில்லை. வாரிசு சான்றிதழ் என் பெயரில் உள்ளதா என்றால் உள்ளது. நங்கவள்ளியில் ஒரு பெண் தரகர் ஒருவர் என் சொந்தகாரர் என்றும் அவர் தான் இந்த திருமணத்தை ஏற்பாடு செய்தார் என்றால் ஆமாம். என் முதல் திருமணத்தை மறைத்து

எதிர்மனுதாரருக்கு திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் சொல்லி தான் செய்து வைத்தார்கள். முதல் கணவர் இறந்த பிறகு எத்தனை ஆண்டுகள் கழித்து எனக்கு இரண்டாவது திருமணம் செய்தார்கள் என்றால் 3 வருடம் கழித்து செய்தார்கள்.

8) திருமணம் பதிவு செய்யப்பட்டதா என்றால் இல்லை. திருமண தேதி தெரியுமா என்றால் 23.03.2023 ம் தேதி நடந்தது. திருமண பத்திரிக்கை அடித்து அச்சிடப்பட்டது என்றால் ஆமாம். எங்கு அச்சடிக்கப்பட்டது என்றால் ஜலகண்டாபுரத்தில் அச்சடிக்கப்பட்டது. அவர்கள் தரப்பில் எங்கடிக்கப்பட்டது என்றால் சித்தப்பா மகன் பிரஸ் வைத்துள்ளார். அங்கு அச்சடிக்கப்பட்டது. திருமணம் எங்கு நடைபெற்றது என்றால் என் அம்மாவீட்டில் நடந்தது. வழக்கமாக திருமணம் கணவர் வீட்டில் தான் நடக்கும் என்றால் ஆமாம்.

9) முறைப்படி திருமணம் என் கணவர் வீட்டில் நடந்ததை மறைத்து புதியதாக பத்திரிக்கை அடித்து என் வீட்டில் நடந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்ன காரணத்திற்காக உடனடியாக விவாகரத்து கேட்டேன் என்றால் என்னை கண்டு கொள்ளவில்லை. பல பஞ்சாயத்துகள் செய்து சேர வாய்ப்பில்லை என்பதால் விவாகரத்து தாக்கல் செய்தேன். என் மாமியாருடன் சேர்ந்து என் கணவர் கொடுமை செய்தது குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் ஆமாம்.

10) என் கணவரின் அண்ணிக்கும், என் கணவருக்கும் தகாத உறவில் இருந்ததாக கூறப்படும் நிலையில் அது குறித்து புகார் கொடுக்கவில்லை என்றால் ஆமாம். அவ்வாறு ஏதாவது நடந்திருந்தால் உண்மையாக புகார் கொடுத்திருப்பேன் என்றும் அவ்வாறு நடக்காததால் புகார் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. என் கணவர் தர்மபுரி காமராஜபேட்டையில் குடியிருக்கிறார் என்றால் ஆமாம். அவர் அண்ணன் அண்ணியுடன் எங்கள் ஊரிலிருந்து 10 கிலோமீட்டர் தொலைவில் உள்ள நங்கவள்ளியில் வசிக்கிறார் என்றால் ஆமாம்.

11) தாலி தங்க கொடியுடன் சேர்த்து கட்டினாரா என்றால் வெறும் தாலி தான் கட்டினார். மாங்கல்யம் எவ்வளவு பவுன் என்றால் 1/2 பவுனாகும். 3 பவுன்

செயின் தாலியுடன் சேர்த்து என் கணவர் அணிவித்தனர் என்றால் ஆமாம். திருமணத்திற்கு நான், என் அப்பா, அம்மா, என் அண்ணன் ஆகிய நால்வர் மட்டுமே வந்தனர் என்றும் அவ்வாறு இல்லை.

12) என் உறவு முறைகள் யாரும் திருமணத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல. திருமணத்திற்கு எத்தனை பேர் வந்தனர் என்றால் 50 பேர் வந்தனர். எதிர்மனுதாரர் ஊரைச் சேர்ந்தவர்கள் அனைவரும் வந்து திருமணம் நடந்தது என்றால் சரியல்ல. திருமணம் எங்கள் ஊரில் தான் நடந்தது. எதிர்மனுதாரருக்கு என் அண்ணன் 1/4 பவுன் மோதிரம் தங்கத்தில் போட்டார். எனக்கு 1/4 பவுன் மோதிரம், தோடு போட்டார்களா என்றால் 1/4 பவுன் மோதிரம் மட்டுமே போட்டார்கள்.

13) 4 கோனிபையில் பாத்திரங்கள் கொண்டு வந்து என்னை விட்டுவிட்டு சென்றார்கள் என்றால் அனைத்து சீர்வரிசையும் செய்தார்கள். பழைய புடவை, பழைய பாத்திரம் தவிர வேறு எதுவுமே கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என் அப்பா, அம்மா, சகோதரர் கிருஷ்ணராஜ், அவர் மனைவி கவிதா, குழந்தைகள் தவிர வேறு யாரும் வரவில்லை என்றும் அது பற்றி கேட்டதற்கு பெண் கொடுப்பது நாங்கள் தான் என்றும் வேறு யாரும் வரவேண்டிய அவசியமில்லை என்றும் சொன்னார்கள் என்றால் சரியல்ல.

14) எப்போது திருமணம் நடந்தது என்றால் விடியற்காலை 4.30 மணிக்கு நடந்தது. பிரம்ம முகூர்த்தம் என்பது கோவிலில் நடப்பது என்றால் ஆமாம். விடியற்காலை 4.30 மணிக்கு தாலி கட்டியதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. என் மாமியார் சத்துணவில் ஆயா வேலை செய்து தற்போது ஓய்வில் உள்ளார் என்றால் ஆமாம். எதிர்மனுதாரர், மாமியார், நான் ஆகியோர் மட்டுமே வாழ்ந்தோம் என்றால் ஆமாம்.

15) எதிர்மனுதாரர், என் மாமியார் ஆகியோர் சித்தாள் வேலைக்கு சென்று மாலை 6 மணிக்கு தான் வீட்டிற்கு வருவார்கள் என்றால் ஆமாம். அவ்வாறு வரும் போது துணி துவைத்து, சமையல் செய்வது எல்லாம் அவர் அம்மா தான் செய்தார்

என்றும், என்னை மகள் மாதிரி பார்த்து வந்தார் என்றால் நான் மட்டும் தான் வீட்டு வேலைகளை செய்வேன்.

16) டவுனில் இருந்து நான் சென்றதால் எந்த வேலைக்கும் செல்லாமல் வீட்டு வேலை செய்யாமல் சாப்பிட்ட தட்டை கழுவால் இருப்பேன் என்றும் என் மாமியார் தான் கழுவி வைத்துவிட்டு இரவு சாப்பாடை என் மாமியார் சமைத்து தட்டில் போட்டு கொடுத்தால் தான் நான் சாப்பிடுவேன் என்று சொன்னால் சரியல்ல. என் கணவருக்கு தறி வேலை தெரியாது என்றால் ஆமாம்.

17) நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என் கணவர் என்ன படித்துள்ளார் என்றால் தெரியாது. திருமணம் ஆகி ஒரு மாதம் கழித்து என் கணவர் என் அண்ணியிடம் தான் பேச பிடிக்கும் என்று கூறினார். மேற்படி விவரத்தை என் தாயார் வீட்டில் சொல்லவில்லை. எதிர்மனுதாரர் என் அப்பா, அண்ணனுக்கு தறி தொழில் நஷ்டம் ஏற்பட்டதால் ரூ.30,000/- கடன் வாங்கி கொடுத்தார் என்றால் அவ்வாறு இல்லை. மேலும் பணம் வேண்டுமென்று சொல்லியதற்கு ஏற்கனவே கடன் வாங்கியதை திருப்பி தரவில்லை என்று என் கணவர் சொல்லினார். வாரம் ஒருமுறை என் அம்மா வீட்டிற்கு செல்ல வேண்டுமென்று தொடர்ச்சியாக வற்புறுத்தினேன் என்றால் அவ்வாறு இல்லை.

குறுக்கு விசாரணைதொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

Myilswamy Digitally signed by Myilswamy Date: 2026.03.26 16:04:55 +0530

Judicial Magistrate No.II,
Mettur.